# ஆமைகளை காணும் போது பின்பற்ற வேண்டியவை மற்றும் தவிர்க்க வேண்டியவை







ஆமைகள் மீது ஒளிரும் விளக்கை (bright light) பாய்ச்சாதீர்கள். இந்த வெளிச்சம் பெண் ஆமையை தொந்தரவு செய்து, முட்டை இடுவதை பாதிக்கக்கூடும்.



தற்படம் (selfie) எடுத்துக்கொள்ளாதீர்கள். ஆமையின் அருகில் செல்வது அதை தொந்தரவு செய்து, முட்டை இடும் செயலுக்கு இடையூறாக இருக்கலாம்.




ஆமைகள் தங்கள் இயற்கையான நடத்தையை மாற்றாமல் இருக்க ஆமைகளின் அருகில் செல்லாதீர்கள். குறைந்தபட்சம் 10–15 மீட்டர் தூரத்தில், மறைந்து இருந்து கவனிக்கவும்.

ஆமையை தொடாதீர்கள் அல்லது அதன் மேல்புறத்தை தடவாதீர்கள். குறிப்பாக, ஆமையின் தலை பகுதியை அணுகுவதை தவிர்க்கவும்.
ஆமையைப் பிடிக்கவோ, தூக்கவோ, அல்லது அதன் மீது ஏறவோ முயற்சிக்காதீர்கள். இது சட்டவிரோதமானது.





ஆமையின் கூட்டில் இருக்கும் முட்டைகளை தொடாதீர்கள். தொடுவதால் அவை சேதமடையக்கூடும் அல்லது கிருமித் தொற்று ஏற்படக்கூடும்.

ஆமைகள் கடற்கரையில் காணப்பட்டால், அருகிலுள்ள வனத்துறை அலுவலகத்திற்கு உடனடியாக தகவல் தெரிவிக்கவும்.





படங்கள் அல்லது காணொளிகளை பதிவு செய்ய சிவப்பு ஒளியை மட்டுமே பயன்படுத்தவும்.



ஆமைகளிடம் இருந்து குறைந்தது 5–10 மீட்டர் தூரத்தில் இருந்து, அமைதியாக கவனிக்கவும்.



ஆமைக்குஞ்சுகளை தொடாதீர்கள்.







ஒளியுமிழியைப் பயன்படுத்தி புகைப்படம் எடுக்காதீர்கள். இந்த ஒளி ஆமைக்குஞ்சுகளை பாதிக்கலாம்.

ஆமைக்குஞ்சுகளின் மீது விளக்கின் வெளிச்சத்தைப் பாய்ச்சாதீர்கள். இது அவற்றை திசைமாறச் செய்து, ஒளி இருக்கும் திசையில் செல்ல வைக்கும்.

ஆமைக்குஞ்சுகளை பிடித்து நீருக்குக் கொண்டு செல்லாதீர்கள்.

கொன்றுண்ணிகள் ஆமைக்குஞ்சுகளை பிடிக்கும் நிகழ்வுகளில் தலையிடாதீர்கள்.

ஆமைக்குஞ்சுகளை தொலைவில் இருந்து கவனிக்கவும்.

ஆமைக்குஞ்சுகள் இயற்கையாக கடற்கரையில் ஊர்ந்து கடலுக்கு செல்ல விடுங்கள்.